## பிப்ரவரி - 4

**"என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு, அவளை விட்டு வெளியே வாருங்கள்." - வெளி 18 : 4**

"என் ஜனங்களே" என்ற பெயருக்குத் தகுதியுள்ளவர்கள் எவர்களோ, அவர்கள், கர்த்தரின் சத்தத்தைக் கேட்டுக் கீழ்ப்படிந்து பாபிலோனை விட்டு வெளியே வந்து, "அவளுக்கு நேரிடும் வாதைகளில்" அகப்பட மாட்டார்கள். ஏனென்றால், பாபிலோனின் உண்மையான நிலைமையைக் கண்டவுடனே அதைவிட்டுத் தப்பி ஓடுகிற அவர்களுடைய கீழ்ப்படிதல் அவர்கள் ஒருபோதும் அவளுடைய பாவங்களுக்கு உண்மையாகவே சம்மதித்திருந்ததில்லை என்பதை நிரூபிக்கும். இப்போது பிரகாசிக்கிற வெளிச்சத்தில் பாபிலோனையும் அவளுடைய தூஷண உபதேசங்களையும் கண்டுகொண்ட பிறகும், தொடர்ந்து அங்கே இருப்பவர்கள், அந்தத் தூஷணங்களை ஆமோதிக்கிறவர்களாகவும், மிக அதிக தீர்க்கமாய் "வாதைகளுக்கு" பாத்திரவான்களாகவும் எண்ணப்படுகிறார்கள். அவர்கள் பாபிலோனியரின் "களை" வகுப்பாரைப் போல அல்லது அதற்கு மேலாகவும் இவ்விதமாக எண்ணப்படுகிறார்கள். ஏனெனில் அவர்களிடம் களை வகுப்பாரைவிட, அதிகமான வெளிச்சம் இருக்கிறது.

**- Z ’00, 3 (R 2553).**

எங்கே தேவனுடைய ஜனங்கள் இருந்திருக்கிறார்கள்? கிறிஸ்து சமயாசார தேசங்களின் வெவ்வேறு பிரிவுகளில் இந்தப் பிரிவுகளைவிட எங்கே அதிக வெளிச்சத்திற்கு விரோதமாகப் பாவம் செய்யப்படுகிறது? இந்தப் பிரிவுகளின் மேலல்லாமல், வேறு எதன்மேல் தேவனுடைய வாதைகள் அதிக உக்கிரமாக வரும்? ஆகையால், தேவன் தமது ஜனங்களை பாபிலோனை விட்டு வெளியே அழைத்து, அவர்களுடைய வாதைகளிலிருந்து பாதுகாத்துக் காப்பாற்ற வேண்டியது எவ்வளவு நியாயமானதாயிருக்கிறது? இரண்டாம் பட்சமான அர்த்தத்தில் இந்த வாக்கியம் சிறிய பாபிலோனின் பிரிவுகளிலிருந்து வெளியேறும் கர்த்தருடைய ஜனங்களுக்கும் பொருந்தும். **- P ’32, 15.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

சங் 47:10; 48:20; 52:11; எரே 50:8; 51:6,9; 2கொரி 6:17; 7:1; சகரி 2:7; ஆதி 19:16,17,29; லூக் 17:32; மத் 24:15-20; யூதா 23; எண் 16:21; வெளி 16:19; 18:1-24;

**கோபுர வாசிப்பு :** Z ’14, 179 (R 5478).

**வினாக்கள் :** நாம் இருக்குமிடத்திலும், இரக்கப்படுவதிலும், போதகத்திலும், அனுபவத்திலும், ஆவியிலும் "அவளை விட்டு வெளியேறி" இருக்கிறோமா? ஏன்? பலன் என்ன?